# என் இதய தெய்வமே

என் இதய தெய்வமே.. என்னில் எழுந்து வா
என் இதய தெய்வமே.. என்னில் எழுந்து வா
உன் உறவை எண்ணியே.. உள்ளம் ஏங்குதே
உயிரே எழுந்து வா.. உயிரே எழுந்து வா

என் இதய தெய்வமே.. என்னில் எழுந்து வா

அணைத்துக் காக்கும் தாயின் அன்பும்
ஒரு நாள் அழியலாம்
அறவழியில் நடத்தும் தந்தை
அன்பும் அழியலாம் (2)
ஆனால் ஏசுவே.. உன் அன்பிற்கழிவுண்டோ (2)
என் இனிய அன்பே எழுந்து வா

என் இதய தெய்வமே.. என்னில் எழுந்து வா

வஞ்சம் கூறும் நண்பர் கூட்டம்
இங்கு பலவுண்டு
தன்னலமே உருவெடுத்து
உலவும் நட்புண்டு (2)
ஆனால் ஏசுவே.. நல் நண்பன் நீயன்றோ (2)
என் இனிய நண்பா எழுந்து வா

என் இதய தெய்வமே.. என்னில் எழுந்து வா
என் இதய தெய்வமே.. என்னில் எழுந்து வா
உன் உறவை எண்ணியே.. உள்ளம் ஏங்குதே
உயிரே எழுந்து வா.. உயிரே எழுந்து வா

என் இதய தெய்வமே.. என்னில் எழுந்து வா